Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சேவை
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, டிசம்பர் 27, 2024 | இதழ் 258

# மன்மோகன் சிங் உடலுக்கு ஜனாதிபதி, பிரதமர், சோனியா, ராகுல் நேரில் அஞ்சலி
# அரசு மரியாதையுடன் நாளை இறுதி சடங்கு; 7 நாள்கள் துக்கம்

சென்னை 27 டிசம்பர் 2024: மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா, ராகுல் காந்தி எம்.பி. ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

மன்மோகன் சிங் உடல் முழு அரசு மரியாதையுடன் நாளை தகனம் செய்யப்பட உள்ளது. அரசு, காங்கிரஸ் தரப்பில் 7 நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன் சிங்கிற்கு (வயது 92) நேற்று திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு அவர் உயிரிழந்தார். இதையடுத்து மன்மோகன் சிங்கின் உடல் டெல்லியில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவரது உடல் முழு அரசு மரியாதையுடன் நாளை தகனம் செய்யப்பட உள்ளது.

மன்மோகன் சிங் மறைவிற்கு ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர் மோடி, காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா, ராகுல் எம்.பி. மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். உலக தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் டெல்லியில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டுள்ள மன்மோகன் சிங்கின் உடலுக்கு தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு, துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் ஆகியோர் மன்மோகன் சிங் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

இந்தியப் பொருளாதாரத்தை சீர்திருத்துவதில் முக்கியமான பங்களிப்புகளை மன்மோகன் சிங் செய்தார். தேசத்துக்காக அவர் ஆற்றிய சேவை, களங்கமற்ற அரசியல் வாழ்வு, மிகுந்த பணிவு ஆகியவற்றிற்காக அவர் என்றும் நினைவு கூறப்படுவார். அவரது மறைவு நம் அனைவருக்கும் பேரிழப்பாகும். பாரதத்தின் தலைசிறந்த மகன்களில் ஒருவருக்கு எனது மரியாதைக்குரிய அஞ்சலியை செலுத்துவதுடன், அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங்கின் உடலுக்கு பிரதமர் மோடி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். அவருடன் உள்துறை அமைச்சர் அமித்ஷா, மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டா ஆகியோரும் இறுதி மரியாதை செலுத்தினர்.



பிரதமர் மோடி வெளியிட்ட இரங்கல் பதிவில், “முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவு நம் அனைவரையும் மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. மன்மோகன் சிங் மறைவு நாட்டுக்கே பேரிழப்பு ஆகும். அவரது வாழ்க்கை வருங்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாகும். நாம் எவ்வாறு போராட்டங்களை தாண்டி, உயர முடியும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

அவர் எப்போதும் ஒரு நேர்மையான மனிதராக, சிறந்த பொருளாதார நிபுணராக நினைவு கூரப்படுவார். ஒரு பொருளாதார நிபுணராக, அவர் நாட்டுக்கு பல்வேறு சேவைகளை வழங்கினார். பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருந்த நாட்டிற்கு பொருளாதாரத்தில் ஒரு புதிய திசையை உருவாக்கிக் கொடுத்தார். முக்கியமான சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர் சக்கர நாற்காலியில் நாடாளுமன்றத்திற்கு வந்து ஒரு எம்.பி.யாக தனது கடமையைச் செய்தார். அவர் எப்போதும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களுடனும் தனது நல்லுறவைப் பேணி வந்தார். நான் முதல்வராக இருந்தபோது, அவருடன் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதித்திருக்கிறேன். நாட்டின் ஒவ்வொரு குடிமக்கள் சார்பாகவும், டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு எனது அஞ்சலியை செலுத்திக் கொள்கிறேன் என்றார்.

மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு மலர்வளையம் வைத்து காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி., காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

காங்கிரஸ் கட்சி அலுவலகத்திலும் கட்சி கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. காங்கிரஸ் தொடக்க தின விழா உள்பட அக்கட்சி சார்பில் அடுத்த 7 நாட்களுக்கு நடைபெறவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ராகுல் காந்தி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது: இந்தியாவை மிகுந்த ஞானமும், நேர்மையுடனும் மன்மோகன் சிங் வழிநடத்தினார். அவரது பணிவு மற்றும் பொருளாதாரத்தை ஆழமாக புரிந்துகொள்ளும் திறன் நாட்டுக்கு மிகுந்த பேருதவி செய்தது. நான் ஒரு வழிகாட்டியை இழந்துவிட்டேன். அவரது குடும்பத்தினருக்கு என் மனமார்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் மன்மோகன் சிங்கின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக நாளை வைக்கப்படவுள்ளது.

டெல்லி ராஜ பாதை அருகே முன்னாள் பிரதமர்களின் இறுதிச் சடங்கு நடைபெறும் இடத்தில் மன்மோகன் சிங் உடல் தகனம் செய்யப்படவுள்ளது. காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, காங்கிரஸ் ஆளும் மாநில முதல்வர்கள் உள்ளிட்ட அனைவரும் மன்மோகன் சிங் இறுதிச் சடங்கு நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

மன்மோகன் சிங் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக 7 நாள்கள் அரசு தரப்பில் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. இன்று திட்டமிடப்பட்டிருந்த அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படுகின்றன. மேலும் காலை 11 மணிக்கு மத்திய அமைச்சரவை கூடி இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அவரது இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அஞ்சலி செலுத்தும் வகையில் கர்நாடக அரசு இன்று பள்ளி, கல்லூரிகள் மற்றும் அலுவலகங்களுக்கு பொது விடுமுறை அறிவித்தது. மாநிலத்தில் இன்று நடைபெற இருந்த அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மன்மோகன் சிங் மறைவையொட்டி அனைத்து அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கல்வி நிறுவனங்கள் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் மூடப்படும் என ஹிமாசலப் பிரதேச மாநில அரசு அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் மாநில அரசின் அனைத்து தினக்கூலி ஊழியர்களுக்கும் இரண்டு நாள்களுமே ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

டெல்லியில் முதல்வர் அதிஷி தனது அனைத்து அரசு நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துள்ளார். அரசு அலுவலகங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

1932ம் ஆண்டு செப்டம்பர் 26ந் தேதி பஞ்சாப்பில் பிறந்த மன்மோகன் சிங், பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1957ல் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதார மேற்படிப்பை முடித்தார். பின்னர் இந்தியா திரும்பிய அவர் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார். தொடர்ந்து 1962-ல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அதன் பிறகு, மன்மோகன் சிங் 1966 1969ல் ஐ.நா. சபையில் பணியாற்றினார். பின்னர் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தில் ஆலோசகராக பணியாற்றினார்.

மத்திய அரசில் தலைமை பொருளாதார ஆலோசகர் (1972-1976), ரிசர்வ் வங்கியின் கவர்னர் (1982- 1985) மற்றும் திட்டக் குழுவின் தலைவர் (1985- 1987) போன்ற பல முக்கிய பதவிகளை வகித்தார்.

1991ம் ஆண்டு பிரதமராக பி.வி.நரசிம்மராவ் பதவி ஏற்றபோது, அவரது அமைச்சரவையில் மன்மோகன் சிங், நிதி அமைச்சரானார். நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த வேளையில், பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் அதை சமாளித்தார்.

கடுமையான எதிர்ப்பையும் மீறி, இந்தியாவின் பொருளாதாரத்தை தாராளமயமாக்கும் பல கட்டமைப்பு சீர்திருத்தங்களை மன்மோகன் சிங் மேற்கொண்டார்.

கடந்த 2004ம் ஆண்டு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைந்தபோது, யாரும் எதிர்பார்க்காத வகையில் பிரதமராக தேர்ந்து எடுக்கப்பட்டார். பல்வேறு கட்சிகள் அடங்கிய கூட்டணி அரசை திறம்பட நடத்தி 5 ஆண்டுகளை நிறைவு செய்தார்.

தொடர்ந்து 2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலிலும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியிலும் பிரதமராக தொடர்ந்தார். தொடர்ந்து 10 ஆண்டுகள் பிரதமராக அவர் இருந்த காலத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம், வாட் வரி, ஊரக வேலைவாய்ப்பு திட்டம், அணுசக்தி ஒப்பந்தம் ஆகியவை நிறைவேறின. இந்தியாவின் முதல் மற்றும் ஒரே சீக்கிய பிரதமர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் முதன்முதலில் நாடாளுமன்ற மாநிலங்களவைக்கு 1991ல் காங்கிரஸ் எம்.பி.யாக தேர்வானார். அசாம் மாநிலம் சார்பில் அவருக்கு முதல் அரசியல் பதவி கிடைத்தது. இதைத் தொடர்ந்து அவர், 1995, 2001, 2007, 2013 மற்றும் 2019ல் மீண்டும் மாநிலங்களவையின் எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். கடைசியாக ராஜஸ்தான் சார்பில் மாநிலங்களவை எம்.பி.யானவர் கடந்த ஏப்ரல் 13-ல் ஓய்வு பெற்றார்.

1999ல், நடந்த மக்களவை தேர்தலில் மன்மோகன் சிங் தெற்கு டெல்லி தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு பா.ஜ.க.விடம் தோல்வி அடைந்தார்.

பேராசிரியரான மன்மோகன் சிங்கின் நாடாளுமன்ற வாழ்க்கை மொத்தம் 33 வருடங்களாக இருந்தது. இதனிடையே மத்தியில் 1998 முதல் 2004 வரை, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியில் இருந்தது. அப்போது, நாடாளுமன்ற மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக மன்மோகன் சிங் இருந்தார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை: ஐகோர்ட் தானாக முன் வந்து விசாரணை



சென்னை 27 டிசம்பர் 2024: அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழங்கை சென்னை ஐகோர்ட் தானாக முன் வந்து விசாரணை மேற்கொண்டது. தமிழக அரசு, காவல் துறையினரின் விளக்கத்தைப் பெற்று தெரிவிக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை பிற்பகல் வரை தள்ளி வைத்துள்ளனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அங்கு படித்த என்ஜினீயரிங் மாணவி ஒருவர், பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த கொடூர சம்பவம் குறித்து கோட்டூர்புரம் போலீசார் 4 சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து குற்றவாளி ஞானசேகரன் என்பவரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பான காவல்துறையினரின் விசாரணையில் குறைபாடுகள் உள்ளதாகவும், சட்டப்படி பாதிக்கபட்ட பெண்ணின் அடையாளத்தை வெளிப்படுத்தக் கூடாது என்ற போதிலும் வழக்கின் முதல் தகவல் அறிக்கை காவல்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது என்பதால் இந்த சம்பவம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும் என பெண் வழக்கறிஞர் வரலட்சுமி சென்னை ஐகோர்ட்க்கு இன்று கடிதம் அனுப்பி இருந்தார்.

அந்த கடிதத்தில் வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவரை கைது செய்துள்ளதாக காவல்துறை தெரிவித்து இருக்கிறது. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தில் மற்றொரு நபரையும் குறிப்பிட்டு இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம் மற்றும் வி.லக்ஷ்மி நாராயணன் அடங்கிய அமர்வில் வழக்கறிஞர் வரலட்சுமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜெயபிரகாஷ் கடிதத்தின் அடிப்படையில் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணையை சிபிஐக்கு மாற்ற உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதே போல மற்றொரு வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி முதல் தகவல் அறிக்கையை காவல்துறையினர் வெளியிட்டதன் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்ணின் ஒட்டுமொத்த குடும்பமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் மட்டுமல்லாமல் அனைத்து கல்வி நிறுவனங்களின் விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவிகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி இருக்கிறது என்பதால் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முறையிட்டார்.

இரு வழக்கறிஞர்களின் முறையீட்டையும் பெண் வழக்கறிஞரின் கடிதத்தையும் நீதிபதிகள் ஆய்வு செய்தனர். காவல்துறையினரின் புலன் விசாரணை குறித்து தீவிரமான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பெண் வழக்கறிஞர் வரலட்சுமி கடிதத்தை அடிப்படையில் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

மேலும் இந்த வழக்கில் தமிழக உள்துறை செயலாளர், டிஜிபி, சென்னை மாநகர காவல் ஆணையர், அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் பதிவாளர், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவிட்டனர். மேலும் தமிழக அரசு மற்றும் காவல்துறையின் விளக்கத்தை பெறாமல் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என தெரிவித்த நீதிபதிகள், இது தொடர்பாக பிற்பகல் 2.15 மணிக்கு தமிழக அரசு மற்றும் காவல் துறையினரின் விளக்கத்தைப் பெற்று தெரிவிக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை பிற்பகல் தள்ளி வைத்துள்ளனர்.

## ராஜாகிளி விமர்சனம்: தம்பி ராமையா இரண்டு கதாபாத்திரத்தில் தனது நடிப்பின் மூலம், ரசிகர்கர்களை கவர்ந்திருக்கிறார்



சென்னை 27 டிசம்பர் 2024: 'அன்னை மடி' என்ற பெயரில், சமுத்திரக்கனி, ஆதரவற்றோருக்கும், மனநலம் பாதிக்கப்பட்டோருக்குமான இல்லத்தை நடத்தி வருகிறார். ஒரு நாள், மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில், ரோட்டோரக் குப்பையிலிருக்கும் தம்பி ராமையாவை மீட்டு தனது இல்லத்தில் அடைக்கலம் தந்து பராமரிக்கிறார். அப்போது தம்பி ராமையாவிடமிருக்கும் துணி மூட்டையிலிருக்கும் ஒரு டைரியை எடுத்து படிக்கும் சமுத்திரக்கனிக்கு தம்பி ராமையா பல தொழில்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கோடீஸ்வரர் என தெரிய வருகிறது. தொடர்ந்து படிக்கும்போது பல சம்பவங்கள் அவரை அதிர்ச்சியடைச்செய்கிறது. அது என்ன? தம்பி ராமையாவின் இந்த நிலைக்கு காரணம் என்ன என்பது தான், 'ராஜா கிளி'.

தம்பி ராமையா கோடீஸ்வரராகவும், மனநலம் பாதிக்கப்பட்டவராகவும் இருவேறு தோற்றங்களில் நடித்திருக்கிறார். இதில், மனநலம் பாதிக்கபட கதாபாத்திரத்தில் தனது நடிப்பின் மூலம், ரசிகர்கர்களை கவர்ந்திருக்கிறார். தொழிலதிபர் முருகப்பன் கதாபாத்திரத்தில் பல இடங்களில் தூள் கிளப்புகிறார். க்ளைமாக்ஸ் காட்சியில் மகனால் துரத்திவிடப்படும் காட்சியில், படம் பார்ப்பவர்களை கண்கலங்கச் செய்துவிடுகிறார்.

சமுத்திரக்கனிக்கு, வழக்கமான உபதேசம் செய்யும் கதாபாத்திரம். அதை சரியாக செய்திருக்கிறார். க்ளைமாக்ஸ் வசனங்கள் கை தட்ட வைக்கின்றன. தம்பி ராமையாவின் மனைவியாக நடித்திருக்கும் தீபா, சந்தேகம் கொள்ளும் பெண்களை பிரதிபலிக்கிறார். தன்னையும் தொலைத்து, மற்றவர்களையும் தொலைத்து விட்டு நிற்கும் கதாபாத்திரத்தில் நன்றாகவே நடித்திருக்கிறார். இக்கட்டான சூழலில், அவருக்கு உறவுகள் சொல்லும் புத்திமதி நிதர்சனம்.

தம்பி ராமையாவின் இரண்டாவது மனைவியாக நடித்திருக்கும் சுபா, இளம் காதலியாக நடித்திருக்கும் சுவேதா ஷ்ரிம்ப்டன் ஆகியோர் அவர்களது கதாபாத்திரத்தினை உணர்ந்து நடித்துள்ளனர்.

காவல்துறை அதிகாரியாக நடித்திருக்கும் அருள்தாஸ், பழ. கருப்பையா, டேனியல் அனி போப் , பிரவீன் குமார்.ஜி, ரேஷ்மா, வெற்றிகுமரன், விஜே ஆண்ட்ருஸ், மாலிக், , கிரிஷ், கிங் காங் என மற்ற வேடங்களில் நடித்திருப்பவர்கள் கொடுத்த வேலையை திறம்பட செய்திருக்கிறார்கள்.

தம்பி ராமையாவின் இசையில் பாடல்கள் டாப்!

சாய் தினேஷ் பின்னணி இசை சிறப்பு.

ஒளிப்பதிவாளர்கள் கேதார்நாத் ஶ்ரீ கோபிநாத் ஆகியோரது ஒளிப்பதிவு அருமை!

பிரபலமான ஒரு தொழிலதிபரின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தினைசித்தரித்து அதிலிருந்து மிகைப்படுத்தாமல், இதில் சொல்லப்பட்டிருக்கும் கருத்து பாடமாகவே இருக்கிறது.

கதை மற்றும் திரைக்கதை எழுதியிருக்கும் தம்பி ராமையா, கதாபாத்திரங்களை இன்னும் நேர்த்தியானதாக வடிவமைத்துள்ளார். சில கதாபாத்திரங்கள், இரண்டு பக்கமும் பேசுவது அருமை.

மற்றபடி, சபலபுத்தி மனிதர்களின் அதள பாதாள வீழ்ச்சியினை, உணர்வுபூர்வமாக படமாக்கியிருக்கிறார், இயக்குநர் உமாபதி ராமையா.

## டங்ஸ்டன் சுரங்க அனுமதியை ரத்து செய்யக்கோரி மதுரையில் 30-ந் தேதி அண்ணா தி.மு.க. ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை 27 டிசம்பர் 2024: மதுரை மாவட்டம், மேலூர் அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைவதற்கு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்காமல் நாடகமாடி, மேலூர் பகுதி வாழ் மக்களுக்கு துரோகம் இழைத்துள்ள தி.மு.க. அரசைக் கண்டித்தும்; மக்கள் நலன் கருதி, டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு அளித்துள்ள அனுமதியைஉடனடியாக திரும்பப் பெற மத்திய அரசை வலியுறுத்தியும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் 30 ந் தேதி திங்கட் கிழமை காலை 10 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழகத்தின் ஜீவாதார உரிமைகள் பறிபோகும் அபாய நிலை தொடர்கதையாக உள்ளது. அதேபோல், தமிழ்நாட்டில் மக்கள் நலன்களை பாதிக்கும் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு தி.மு.க. அரசு இருந்து வருவது மிகுந்த வேதனைக்குரிய விஷயமாகும்.

அந்த வகையில், மதுரை மாவட்டம், நாயக்கர்பட்டி, அரிட்டாபட்டி ஆகிய பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதற்கான ஏலம் நடைபெற்று, அதன் முடிவு கடந்த 7.11.2024 அன்று அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்தச் சுரங்கம் அமைவதற்கு அப்பகுதி மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், மக்களுக்கு ஆதரவாக அண்ணா தி.மு.க. பல்வேறு வகைகளில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த விவகாரத்தில் இரட்டை வேடம் போட்ட தி.மு.க. அரசின் முகத்திரையை, தகுந்த ஆதாரங்களோடு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நான் தோலுரித்துக் காட்டியதும், தி.மு.க. அரசின் முதலமைச்சரும், நீர்வளத் துறை அமைச்சரும், பல்வேறு வகைகளில் மடைமாற்றவே முயற்சித்தனர். தி.மு.க. அரசின் பதற்றத்திற்கான காரணம், சமீபத்தில் வெளிவந்த மத்திய அரசின் விளக்கம் வாயிலாக வெட்டவெளிச்சமாகி உள்ளது.

ஏலம் அறிவிப்பு முதல், ஏலம் முடிவு வரை தி.மு.க. அரசு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. 3.10.2023 அன்று துரைமுருகன் மத்திய அரசுக்கு எழுதியுள்ள கடிதத்திலும்கூட, டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்காமல், மாறாக, ஏலத்தை மாநில அரசே ஏற்று நடத்த உரிமை வழங்கக் கோரி தான் குறிப்பிடப்பட்டுள்ளது'' என தி.மு.க. -வின் மொத்த சதித் திட்டத்தையும் மத்திய அரசின் விளக்கம் அம்பலப்படுத்திவிட்டது.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மதுரை புறநகர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர், கழக சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும்; மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வியாபாரிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

## ரெயில் முன்பு தள்ளி காதலி கொலை: காதலன் குற்றவாளி என கோர்ட் தீர்ப்பு. தண்டனை விவரம் 30-ந்தேதி அறிவிப்பு



சென்னை 27 டிசம்பர் 2024: 2022ம் ஆண்டு பரங்கிமலை ரெயில் நிலையத்தில் ரெயில் முன்பு மாணவி சத்ய பிரியா தள்ளிவிட்டு கொல்லப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாக சதீஷ் என்பவனை போலீசார் கைது செய்த விசாரணை நடத்தினர்.

அப்போது, சதீஷும், சத்யாவும் காதலித்து வந்ததாகவும் பிறகு சதீஷின் நடவடிக்கைகள் பிடிக்காததால் அவரை விட்டு பிரிந்துள்ளார் சத்யா.

இதை ஏற்றுக்கொள்ள முடியாத சதீஷ், அவ்வப்போது சத்யாவை நேரில் சந்தித்து தன்னை காதலிக்குமாறு தொல்லை கொடுத்ததாகவும் தெரிகிறது. எனினும் சத்யப்பிரியா சதீஷின் காதலை ஏற்கவேயில்லை.

இதனால் ஒருகட்டத்தில் ஆத்திரமடைந்த சதீஷ், கடந்த 2022 அக்டோபர் 13ம் தேதி கல்லூரிக்குச் செல்ல பரங்கிமலை ரெயில் நிலையம் வந்த சத்யப்பிரியாவை, தாம்பரம் சென்று கொண்டிருந்த மின்சார ரெயில் முன்பு தள்ளிவிட்டு கொலை செய்தார்.

இதனை தொடர்ந்து கைதான சதீஷ் பல முறை ஜாமினுக்கு முயன்றும் கிடைக்கவில்லை. இதனால் தொடர்ந்து சதீஷ் சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு சென்னை அல்லிகுளத்தில் உள்ள மகளிர் நீதிமன்ற நீதிபதி ஶ்ரீதேவி முன்பு விசாரணைக்கு வந்தபோது, சிபிசிஐடி காவல்துறை தரப்பில் 70 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டதாகவும், அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பை டிசம்பர் 27 ம் தேதி அறிவிப்பதாகவும் கூறியிருந்தார்.

இதையடுத்து இன்று இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதி அறிவித்தார். சதீஷ் குற்றவாளி என தீர்ப்பு அளித்த நீதிபதி குற்றவாளி சதீஷுக்கான தண்டனை விவரம் 30-ந்தேதி அறிவிக்கப்படும் என கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# எக்ஸ்லரேட் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது கரிஷ்மா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தின் வணிக ரீதியான ஈக்விட்டி பங்கை கையகப்படுத்துவதாக அறிவித்துள்ளது

சென்னை 27 டிசம்பர் 2024: எக்ஸ்லரேட் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது கரிஷ்மா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தின் வணிக ரீதியான ஈக்விட்டி பங்கை கையகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. கரிஷ்மா சொல்யூஷன்ஸ் ஆனது ஆஸ்திரேலியாவில் கணக்கியல், நிதி ஆலோசனை, அடமானம் மற்றும் எஸ் எம் எஸ் எஃப் பிரிவுகளில் 3600 நிர்வகிக்கப்பட்ட சேவைகள் மற்றும் டிஜிட்டல் தீர்வுகளை வழங்கும் அறிவு சார்ந்த வணிக சேவை வழங்குநராகும் என்பது குறிப்பிடத்தக்கது. கரிஷ்மா நிறுவனமானது வாடிக்கையாளர்களின் சிக்கலான நிதி, வரி மற்றும் ஒழுங்குமுறை இணக்கத் தேவைகளைத் தயாரித்தல், கணக்கிடுதல், தாக்கல் செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் உதவுகிறது. கரிஷ்மா நிறுவனமானது சென்னை, பெங்களூரு, திருநெல்வேலி, சிட்னி மற்றும் மெல்போர்ன் ஆகிய இடங்களில் 5 அலுவலகங்களில் 500க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு இயங்கிவருகிறது.

மைக்ரோசாப்ட், போலரிஸ் மென்பொருள் மற்றும் குமரன் சிஸ்டம்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்களுடன் பணியாற்றிய அனுபவத்திற்குப் பிறகு ஜோனா ஸ்டீபன் என்பவர் கரிஷ்மா சொல்யூஷனை துவங்கினார். நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீபன் கூறுகையில், "எக்ஸ்ஸலரேட்டுடன் கரிஷ்மாவின் கூட்டாண்மையை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நிறுவனர்கள் மற்றும் நிர்வாகக் குழுவின் நிறுவப்பட்ட தட பதிவுகள் மற்றும் தொழில்முறை மற்றும் வெற்றிக்கான உறுதியான அர்ப்பணிப்புடன் இணைந்து, அதன் நிபுணத்துவத்துடன் நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களின் போர்ட்ஃபோலியோ மூலம் உலகளாவிய ஆபத்து மற்றும் இணக்கத்தில் எக்ஸ்ஸலரேட்டின் கவனம், கரிஷ்மாவை புதிய உயரங்களுக்கு கொண்டு செல்லும். இந்த கூட்டாண்மை எங்கள் சேவை வழங்கல்களை வளப்படுத்தும் மற்றும் அதிநவீன, அறிவு சார்ந்த வரி மற்றும் இணக்க தீர்வுகளுடன் வாடிக்கையாளர் வெற்றியை அதிகரிக்கும்." என்றார். எக்ஸ்லரேட் பிரைவேட் லிமிடெட் என்பது சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் முதலீட்டு தளமாகும், இது ஈ எஸ் ஜி ஆர் சி பிரிவுகளில் கவனம் செலுத்துகிறது. இந்தியாவின் மிகப்பெரிய சமூக மற்றும் தொழில்துறை இணக்க நிறுவனமான அபராஜிதா கார்ப்பரேட் சர்வீசஸ், இந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த மற்றும் நிலைத்தன்மை அறிக்கையிடல் நிறுவனமான ஸ்டிர்ரப் கம்யூனிகேஷன் கன்சல்டன்ட்ஸ் மற்றும் எஸ் ஓ பி எஸ், கொள்கை மேலாண்மை, செயல்பாட்டு மீள்தன்மை மற்றும் ஈ கே ஒ ய் சி ஆகியவற்றின் டிஜிட்டல் மயமாக்கலுக்கான பி எஃப் எஸ் ஐ-ஐ மையமாகக் கொண்ட மென்பொருள் தயாரிப்பு நிறுவனமான ஜியோம் பிசினஸ் சொல்யூஷன்ஸ் ஆகியவை இதன் குழு நிறுவனங்களில் அடங்கும்.

கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த எக்ஸ்ஸலரேட் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி கே.வி. ராமானந்த் பேசுகையில், "கரிஸ்மா அறிவு சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளில் கூர்மையான கவனம் செலுத்தி நம்பகமான வணிக சேவை கூட்டாளராக உருவெடுத்துள்ளது. ஸ்டீபனின் தலைமையின் கீழ், வலுவான செயல்முறைகள் மற்றும் வலுவான வாடிக்கையாளர் உறவுகளுடன் உயர்தர குழுக்களை உருவாக்கியது. பெரிய அளவிலான தரவு செயலாக்கம், பகுப்பாய்வு மற்றும் உத்தரவாத திறன்களைக் கொண்ட உலகளாவிய இணக்க மையமாக விரைவாக வளர்ச்சியடைவதில் ஸ்டீபன் மற்றும் கரிஸ்மாவில் உள்ள குழுவுடன் நெருக்கமாக பணியாற்ற நாங்கள் விரும்புகிறோம். ஈ யூ மற்றும் ஏ பி ஏ சி பிராந்தியங்களில் பி எஃப் எஸ் ஐ மற்றும் ஈ எஸ் ஜி தரவு உத்தரவாதப் பிரிவுகளில் மேலும் விரிவுபடுத்த நாங்கள் விரும்புகிறோம்." என்றார். ஏ ஜி எஸ் சைதன்யா மற்றும் போர்க்கோ பாரி ஆகியோருடன் எஸ்லரேட் இன் வேட்பாளர்களாக யோகேஷ் பூரா மற்றும் அர்ஜுன் ராமராஜு ஆகியோர் கரிஷ்மா வாரியத்தில் இணைகிறார்கள்.

ஈ ஒய் ஆனது நிதி மற்றும் வரி ஆலோசகராகவும், ஜெ எஸ் ஏ லா எக்ஸ்லரேட் ஆனது சட்ட ஆலோசகராகவும் செயல்பட்டன. ஜூலை வென்ச்சர்ஸின் முதலீட்டு வங்கி நடைமுறையான ஜூலை கனெக்ட் ஆனது பரிவர்த்தனை ஆலோசகராகவும், ஈஸ்வரன் அட்வகேட்ஸ் கரிஷ்மாவின் பங்குதாரர்களுக்கு சட்ட ஆலோசகராகவும் செயல்பட்டன.

# மாற்ற இயலாத கடன் பத்திரங்கள் ஒதுக்கீடு மூலம் ரூ. 15 கோடி மூலதன நிதியை திரட்டும் ஸ்டாண்டர்டு கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட் இத்திட்டத்திற்கு அதன் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது

Standard Capital Markets Limited

சென்னை 27 டிசம்பர் 2024: வங்கிசாரா நிதி நிறுவனங்கள் துறையில் (என் பி எஃப் சி) ஒலு முன்னணி நிறுவனமாக இயங்கி வரும் ஸ்டாண்டர்டு கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட், தனிப்பட்ட ஒதுக்கீடு அடிப்படையில் மொத்தத்தில் ரூ. 15 கோடி என்ற தொகைக்கான மாற்ற இயலாத கடன் பத்திரங்கள் (என் சி டி) ஒதுக்கீடுக்கான முன்வரைவு திட்டத்திற்கு அதன் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருப்பதை அறிவித்திருக்கிறது. அதன் மூலதனக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் மற்றும் அதன் வளர்ச்சி முன்னெடுப்புகளுக்கு ஆதரவளிக்கவும் ரூ 5 பில்லியன் மதிப்பிற்கு மாற்ற இயலாத கடன் பத்திரங்கள் (என் சி டி) வெற்றிகரமாக வெளியிடப்பட்டிருப்பதை இதற்கு முன்னதாக இந்நிறுவனம் அறிவித்திருந்தது. மொத்த நிதியில் ரூ 1.3 பில்லியன் என்ற தொகையானது நிறுவனத்தின் இயக்கச் செயல்பாட்டை மேம்படுத்தும் மற்றும் விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக மூலோபாய அடிப்படையில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயக்கச் செயல்திறனை உயர்த்தவும் மற்றும் வளர்ச்சி பாதையில் நிறுவனம் தொடர்ந்து முன்னேறுவதை ஆதரிக்கவும் வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த கடன் பத்திரங்கள் வெளியீடு குறித்து ஸ்டாண்டர்டு கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட்-ன் நிர்வாகம் கூறியிருப்பதாவது: "இந்த மாற்ற இயலாத கடன் பத்திரங்களின் வெற்றிகர வெளியீடு, எமது பிசினஸ் மாடல் மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கான சாத்தியங்கள் குறித்து முதலீட்டாளர்கள் கொண்டிருக்கும் வலுவான நம்பிக்கைக்கு சாட்சியமாக இருக்கிறது. இயக்கச் செயல்பாட்டில் நேர்த்தி நிலையை மேம்படுத்தவும் மற்றும் சந்தையில் எமது அந்தஸ்தை வலுப்படுத்தவும் நாங்கள் கொண்டிருக்கும் பொறுப்புறுதியின் ஒரு அங்கமாக இயக்கச் செயல்பாடுகளுக்காக ரூ 1.3 பில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. எமது பங்குதாரர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் நீண்டகால அடிப்படையில் மதிப்பை வழங்குவதில் எங்களது சிறப்பு கவனம் இனியும் தொடர்ந்து இருக்கும்".

இந்த வெளியீட்டின் மூலம் திரட்டப்பட்டுள்ள தொகையில் எஞ்சிய பகுதியை பல்வேறு முக்கியமான நோக்கங்களுக்காக பயன்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. மேலதிக விரிவாக்க செயல்திட்டம், நடப்பு மூலதன தேவைகள் மற்றும் ஏற்கனவே இருக்கும் கடன் பொறுப்புகளை குறைத்தல் ஆகியவை இந்நோக்கங்களுள் உள்ளடங்கும்.

நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் மேம்படுத்தப்பட்டுள் பங்குதாரர்களுக்கான மதிப்பு ஆகியவற்றிற்காக உகந்த நிலையில் நிறுவனத்தை இந்த நிதி திரட்டல் நடவடிக்கை நிலைநிறுத்தும் என்று ஸ்டாண்டர்டு கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட் உறுதியாக நம்புகிறது.

சமீபத்தில், தனிப்பட்ட ஒதுக்கீடு அடிப்படையில் ஒரு அல்லது அதற்கும் அதிகமான தொகுப்புகளில் ரூ 500 கோடி என்ற தொகை வரை 50,000 பாதுகாக்கப்பட்ட, பட்டியலிடப்படாத, தரநிலைப்படுத்தப்படாத, மீட்கக்கூடிய என் சி டி-க்கள் (மீட்கக்கூடிய கடன் பத்திரங்கள்) வெளியீடு திட்டத்திற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருந்தது. முன்னதாக, இன்டராக்டிவ் ஃபிளாட் பேனல்களை (ஐ எஃப் பி) வாங்குவதற்கு உதவ பள்ளிகளுக்கும் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் பூஜ்ஜிய வட்டியுடன்கூடிய சமமாதத் தவணை (ஈ எம் ஐ) திட்டம் அறிமுகம் செய்யப்படுவதை இந்நிறுவனம் பெருமிதத்துடன் அறிவித்திருந்தது. கற்பித்தல் மேற்கொள்ளப்படும் வழிமுறையை இந்த முன்னெடுப்பு திட்டம் புரட்சிகரமாக மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் கற்பித்தல் - கற்றல் அனுபவத்தை இந்த டிஜிட்டல் வகுப்பறை வழங்கும்.

# அண்ணாமலை தன்னைத் தானே சாட்டையால் அடித்து போராட்டம்

சென்னை 27 டிசம்பர் 2024: அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமையை கண்டித்தும், தி.மு.க. அரசை கண்டித்தும் கோவையில் தனது வீட்டு முன்பு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தன்னைத் தானே சாட்டையால் அடித்து இன்று காலை போராட்டம் நடத்தினார்.

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து சாட்டையால் அடித்து போராட்டம் நடத்துவேன் என்றும் தி.மு.க. ஆட்சியை அகற்றும் வரை நான் காலணிகள் அணிய மாட்டேன். நாளை முதல் 48 நாட்களுக்கு நான் விரதம் இருந்து அறுபடை முருகன் கோவில்களுக்கு சென்று, முருகப்பெருமானிடம் முறையிடப்போகிறேன் என்று பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்திருந்தார்.

அதன்படி மேல் சட்டை அணியாமல், பச்சை வேஷ்டி அணிந்து

கோவை காளப்பட்டி சாலையில் அமைந்துள்ள அவரது வீட்டின் முன்பு போராட்டத்தை நடத்தினார். இன்று காலை 10 மணியளவில் தொண்டர்கள் முன்னிலையில் 6 முறை 5 நீள சாட்டையால் தன்னைத்தானே அடித்து அண்ணாமலை போராட்டம் நடத்தினார். அண்ணாமலை சாட்டையால் அடிக்கும்போது அங்கு கூடியிருந்த பாஜக தொண்டர்கள் வெற்றிவேல்... வீரவேல் என முழக்கமிட்டனர்.



பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை, "இன்று நாங்கள் முன்னெடுத்துள்ள இந்தப் போராட்டம் இன்னும் தீவிரமடையும். இது தனி நபருக்கு எதிரான போராட்டம் அல்ல.

கண் முன்னால் அடுத்த தலைமுறை அழித்து கொண்டு இருப்பதை பார்த்து கொண்டு இருக்கிறோம். கல்வியின் தரம் குறைந்துள்ளது. தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது தொடுக்க கூடிய குற்றச்செயல்கள் ஒவ்வொரு நாட்களுக்கு அதிகரித்து கொண்டே இருக்கிறது.

எதற்காக 6 முறை சாட்டையடி என்று நீங்கள் கேட்கலாம். முருகப் பெருமானிடம் இந்த ஆறு சாட்டையடி மூலம் ஒரு வேண்டுதல் வைத்துள்ளோம். நம் தமிழ் மண்ணில் உடலை வருத்தி இறைவனிடம் வைக்கப்படும் வேண்டுதலுக்கு ஒரு விளைவு இருக்கும் என்பது நம்பிக்கை. நான் அந்த மரபையே பின்பற்றி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளேன். தெரிந்தோ தெரியாமலோ நாங்களே கூட ஏதேனும் தவறு செய்திருக்கலாம். அதற்குக் கூட இது தண்டனையாக இருக்கட்டும்.

எல்லா மேடைகளில் தி.மு.க.வை தோலுரித்து காட்ட போகிறோம். 3 ஆண்டுகளாக தமிழகத்தை பின்னோக்கி கொண்டு சென்று உள்ளனர்.

நான் காவல்துறையில் ஐபிஎஸ் அதிகாரியாக இருந்தபோது 10ம் வகுப்பு மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொல்லப்பட்ட வழக்கை விசாரித்தேன். குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்தேன். அப்போது அந்தச் சிறுமியின் தாய் என்னிடம் "குற்றவாளியை பிடித்துவிட்டீர்கள், என் மகளைத் திருப்பித் தருவீர்களா?" எனக் கேள்வி கேட்டார். அந்தக் கேள்வி என்னை அரசியலில் பயணிக்க வைத்தது. எல்லோரையும் போல் ஒரு பிரச்சினை வரும்போது அதைப்பற்றி பேசிவிட்டு பின்னர் மறந்துவிட்டு அதன் பின்னர் அடுத்த பிரச்சினையைப் பேசும் அரசியல்வாதியாக என்னால் இருக்க முடியவில்லை. இந்தச் சம்பவம் என்னை வெகுவாக பாதித்துவிட்டது என்றார்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஒரு போராட்டத்தை அண்ணாமலை முன்னெடுத்துள்ளார், இது கேலிக்கூத்தாக உள்ளது என்று தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறியுள்ளார்.

அண்ணாமலையின் சாட்டையடி போராட்டம் குறித்து அவர் கூறியதாவது:

பதவிக்கு ஆபத்து, சாட்டை அடித்து நேர்த்திக்கடன் செய்தால் நல்லது என்று ஜோதிடர் யாரோ கூறியிருக்கிறார்கள். புதிய பதவி கிடைக்கும் என்று ஜோதிடர் சொன்னதால் அண்ணாமலை சாட்டை அடித்து நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளார்.

பா.ஜ.க.வினரே அண்ணாமலையின் இந்த போராட்டத்தை ஏற்பார்களா என்பது சந்தேகம். அரசியலுக்காக கேலிக்கூத்தான போராட்டத்தை அண்ணாமலை முன்னெடுத்துள்ளார். அண்ணாமலை செய்யும் வேடிக்கைகளில் இதுவும் ஒன்று.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை நடந்தபோது அண்ணாமலை எங்கே சென்றார், என்ன செய்துகொண்டிருந்தார்.

பாலியல் குற்றவாளிகள் மீது இரும்புக்கரம் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் குரல்
உள்ளது உள்ளபடி



## பீமா பிரில்லியன்ஸ் வைர நகைத் திருவிழாவில் பங்கேற்று நேர்த்தியின் பிரகாசத்தைக் கண்டறியுங்கள் பீமா ஸ்டோர்களில் வைரங்கள் மீது, ஜனவரி 5 வரை பிரத்தியேகமாக கிடைக்கும் சலுகைகளைப் பெறுங்கள்



சென்னை 27 டிசம்பர் 2024: திருமண சீசன் தொடங்கும் நிலையில், நம்பிக்கை, தரம் மற்றும் நிகரற்ற கைவினைத்திறன் ஆகியவற்றுக்கு ஒத்த ஒரு பெயரான பீமா, டிசம்பர் 9 முதல் ஜனவரி 5, 2025 வரை ‘பீமா ப்ரில்லியன்ஸ் வைர நகைத் திருவிழாவை’ நடத்துகிறது. இந்த பிரமாண்டமான கொண்டாட்ட சீசனை இன்னும் சிறப்பானதாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட இணையற்ற சலுகைகளை அனுபவிக்கின்ற அதே வேளையில் வாடிக்கையாளர்களை கண்கவரும் வைர நகைகளின் அழகில் மயங்க அழைக்கிறது. வைர நகை வாங்குகின்ற மகிழ்ச்சியை அதிகரிக்க, பீமா ஒரு காரட்டுக்கு 7,000 ரூபாய் தள்ளுபடியையும், ஒவ்வொரு காரட்டுடன் 1 கிராம் தங்க நாணயத்தையும் இலவசமாக வழங்குகின்றது, மேலும் கூடுதலாக 10% செய்கூலி மீது சேமிக்க பழைய வைரங்கள் எக்ஸ்சேஞ்ச் அல்லது தங்க நகைகள் வாங்குங்கள். இதன் மூலம் மிகச்சிறந்த நகைகளை சொந்தமாக்குவது முன்பை விட எளிதாக மாறி உள்ளது.

இந்த சலுகைகள், வாழ்க்கையின் மிகவும் நேசத்துக்குரிய தருணங்களைக் குறிக்கின்ற அபிலாஷை, கௌரவம் மற்றும் நீடித்த அழகின் சின்னங்களான வைரங்களின் காலத்தால் அழியாத வசீகரத்தின் கொண்டாட்டமாகும். நீங்கள் ஒரு திருமணத்திற்கு ஆயத்தமாக இருந்தாலோ அல்லது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வைக் கொண்டாடினாலும் சரி, பீமா வின் வைர சேகரிப்பு மிகவும் கச்சிதமாக உள்ளடக்கிய விலைமதிப்பற்ற நினைவுகளையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, இந்த திருவிழா எச் என் ஐ களின் பகுத்தறியும் ரசனைகளை வழங்குகிறது மற்றும் பாரம்பரியம் முதல் நவீன காலம் வரை ஒரு பிரத்யேக வரம்பை வழங்குகின்ற விதிவிலக்கான வடிவமைப்பு மற்றும் இந்திய கைவினைத்திறனை நாடும் என் ஆர் ஐ களின் திரும்புதலுடன் ஒத்துப்போகிறது. நேர்த்தியான நெக்லஸ்கள், வளையல்கள், மூக்குத்திகள் மற்றும் மோதிரங்கள் உட்பட இந்த சிந்தனையுடன் தொகுக்கப்பட்ட சேகரிப்பில் உள்ள ஒவ்வொரு நகையும் ஒரு பொக்கிஷமான முதலீடாக மட்டுமல்ல, நாகரீகமான ரசனைக்கான ஒரு சான்றாகவும் இதை அமைக்கின்ற கலைத்திறன் மற்றும் புதுமையின் மட்டற்ற கலவையை உள்ளடக்குகிறது.

பல தசாப்தங்களாக நிபுணத்துவம் மற்றும் தரத்தில் உறுதியான அர்ப்பணிப்பு கொண்ட பீமா, குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை அழகாகவும் நேர்த்தியாகவும் கொண்டாடுவதில் அவர்களுக்கு உதவுகின்ற வகையில் எண்ணற்ற வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான பங்காளியாக இருந்துவருகிறது. இந்த பீமா பிரில்லியன்ஸ் வைர நகை திருவிழா இந்த பாரம்பரியத்தை விரிவுபடுத்துகிறது, இது நகைகளை வழங்குவது மட்டுமல்ல, நம்பிக்கை, அதிநவீனம் மற்றும் இணையற்ற வாடிக்கையாளர் சேவையை உள்ளடக்கிய ஒரு மறக்க முடியாத அனுபவத்தை வழங்குகிறது.

இன்றே உங்கள் அருகில் உள்ள பீமா ஸ்டோருக்குச் சென்று, விதிவிலக்கான சலுகைகளுடன் கூடிய நேர்த்தியான வடிவமைப்புகளை ஆராயுங்கள்.

## கைனடிக் கிரீன் சென்னையில் இரண்டு புதிய டீலர்ஷிப்களைத் திறந்ததன் மூலம் தமிழ்நாட்டில் தனது இருப்பை வலுப்படுத்துகிறது



சென்னை 27 டிசம்பர் 2024: இந்தியாவின் முன்னணி மின்சார இரண்டு மற்றும் மின்சார மூன்று சக்கர வாகன உற்பத்தியாளரான கைனடிக் கிரீன் எனர்ஜி மற்றும் பவர் லிமிடெட் சொல்யூஷன்ஸ், சென்னையில் தனது இரண்டு புதிய மின்சார இரு சக்கர வாகன டீலர்ஷிப்களைத் திறப்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. தாம்பரத்தில் வேதா கார்ப்பரேஷன் மற்றும் ரெட்ஹில்ஸில் உள்ள ஆர்.எம்.இ.வி டெக்னாலஜிஸ் ஆகிய இரண்டு டீலர்ஷிப்களின் பிரமாண்டமான திறப்பு, தமிழ்நாட்டில் தனது இருப்பை விரிவுபடுத்துவதற்கான கைனடிக் கிரீனின் உறுதிப்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

தொடக்க விழாக்களில் கைனடிக் கிரீன் தலைவர் 2டபிள்யூ தலைவர் திரு. பங்கஜ் சர்மா கலந்து கொண்டு சிறப்பித்தார். நிறுவனத்தின் மற்ற பிரதிநிதிகளில் திரு முரளிகிருஷ்ணா மற்றும் திரு கார்த்திகேயன் ஆகியோர் அடங்குவர். இந்த கம்பீரமான நிகழ்வில் முன்னணி நிதியாளர்கள், கருத்துத் தலைவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர், அவர்கள் காலநிலை மாற்றம் மற்றும் மாசுபாட்டை நிவர்த்தி செய்வதில் மின்சார வாகனங்கள் (ஈ வி) வகிக்கும் முக்கிய பங்கு குறித்து விவாதித்தனர். சென்னையில் கைனடிக் கிரீன் நிறுவனத்தின் புதிய டீலர்ஷிப்களில் விசாலமான வசதிகளும், பிரத்யேக சேவை ஆதரவும் உள்ளன. இந்திய நுகர்வோரின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட ஈ-லூனா, ஈ-சூலூ மற்றும் ஜிங் உள்ளிட்ட கைனடிக் கிரீனின் பல்வேறு வகையான மின்சார இரு சக்கர வாகனங்களை டீலர்ஷிப்கள் பெருமையுடன் காட்சிப்படுத்துகின்றன. இந்த மாதிரிகள் அதிநவீன தொழில்நுட்பத்துடன் நிலைத்தன்மையை தடையின்றி கலக்கின்றன, ஸ்மார்ட், கூர்மையான மற்றும் நேர்த்தியான வடிவமைப்புகளை தனித்துவமான அம்சங்களாக வழங்குகின்றன. மேலும், ஈ2டபிள்யூ இன் உரிமையை வாடிக்கையாளர்களுக்கு வசதியாக மாற்ற டீலர்ஷிப்பில் சிறந்த நிதி விருப்பங்களும் கிடைக்கின்றன. டீலர்ஷிப் விரிவாக்கம் குறித்து பேசிய கைனடிக் கிரீன் நிறுவனத்தின் வ் தலைவர் பங்கஜ் சர்மா சென்னையில் எங்கள் புதிய டீலர்ஷிப்களை திறப்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் இது தமிழ்நாடு முழுவதும் எங்கள் தடத்தை விரிவுபடுத்துவதற்கான முக்கிய படியாகும். இந்த மைல்கல் இந்தியா முழுவதும் மின்சார இயக்கத்தை அணுகக்கூடியதாகவும் பிரதான நீரோட்டமாகவும் மாற்றுவதற்கான எங்கள் தற்போதைய உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. எங்கள் அர்ப்பணிப்புள்ள ஷோரூம் குழுக்கள் வாடிக்கையாளர்களுக்கு நிபுணத்துவ வழிகாட்டுதலுடன் உதவுவார்கள் அவர்கள் தடையற்ற வாங்கும் அனுபவம் சேவை ஆதரவு மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் வாங்குதல் குறித்து தகவலறிந்த முடிவுகளை எடுக்க அதிகாரம் அளிப்பதை உறுதி செய்வார்கள். வேதா கார்ப்பரேஷனின் டீலர் முதன்மை அதிகாரி திரு பாலாஜி டி கூறுகையில், "கைனடிக் கிரீனுடன் கூட்டு சேர்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், அவர்கள் எங்கள் மீது காட்டிய ஆதரவு மற்றும் நம்பிக்கைக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். உலகத் தரம் வாய்ந்த சேவை அனுபவத்தை உறுதி செய்யும் அதே வேளையில், வாடிக்கையாளர்களுக்கு தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும் உயர்மட்ட சேவைகள் மற்றும் நிபுணர் வழிகாட்டுதலை வழங்குவதே எங்கள் நோக்கம். மின்சார வாகன சந்தையின் விரைவான வளர்ச்சியுடன், சென்னையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து தீர்வுகளை ஊக்குவிப்பதில் இந்த டீலர்ஷிப் முக்கிய பங்கு வகிக்கும் என்று நான் நம்புகிறேன். ஆர்.எம்.இ.வி டெக்னாலஜிஸின் டீலர் முதன்மை திரு ரமேஷ் மாயவீரன் கூறுகையில் கைனடிக் கிரீனுடன் இணைந்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் மேலும் அவர்கள் எங்கள் மீது காட்டிய நம்பிக்கையால் தாழ்மையடைகிறோம். நிபுணத்துவ வழிகாட்டுதல் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதில் எங்கள் அர்ப்பணிப்பில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. சென்னையில் எவ் சந்தை அடைந்து வரும் முன்னேற்றத்துடன் நகரத்தில் நிலையான போக்குவரத்து தீர்வுகளுக்கு பங்களிப்பதில் இந்த கூட்டாண்மை முக்கிய பங்கு வகிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## வேதாந்தா குழுமத்திற்கான மறு மதிப்பீடு : வி ஆர் எல் ஒரு வருடத்தில் எஸ்&பி-ன் மூன்றாவது மேம்படுத்தலைப் பெறுகிறது

சென்னை, 27 டிசம்பர் 2024: ஒரு வருட வளர்ச்சி மற்றும் பல குழு-நிலை மறு மதிப்பீடுகளுக்கு இடையே, வேதாந்தா ரிசோர்சஸ் லிமிடெட் (வி ஆர் எல்) டிசம்பர் 20 அன்று எஸ்ஷி & பி குளோபல்-லிருந்து மற்றொரு மேம்படுத்தலைப் பெற்றது. ஏஜென்சி வி ஆர் எல்-ன் கார்ப்பரேட் ஃபேமிலி மதிப்பீட்டை ‘பி-’ இலிருந்து ‘பி’ ஆக உயர்த்தியது. இதன் மூலம், எஸ்&பி-ன் வி ஆர் எல்-ன் மதிப்பீடு டிசம்பர் 2023 இல் 'சி சி' இலிருந்து டிசம்பர் 2024 இல் 'பி' ஆக ஐந்து படிகள் உயர்ந்துள்ளது. 2028 ஆம் ஆண்டுக்கான பத்திரங்களுக்கு ஒப்புதல் கோரும் பயிற்சியை மூடுவதற்கு தேவையான குறைந்தபட்ச ஏற்புகளை வி ஆர் எல் பெற்ற பிறகு மேம்படுத்தப்பட்டதாக எஸ் & பி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. "புதிய நிதி நெகிழ்வுத்தன்மை மற்றும் மேம்பட்ட மூலதன சந்தை அணுகல் கொடுக்கப்பட்ட பரிவர்த்தனைக்குப் பிறகு, மறுநிதியளிப்பு அபாயங்கள் மிகவும் சமாளிக்கக்கூடியதாக இருக்கும் என்ற எங்கள் எதிர்பார்ப்பை நிலையான கண்ணோட்டம் பிரதிபலிக்கிறது" என்று நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“நிலையான கண்ணோட்டம் நிறுவனத்தின் ஒலி அடிப்படையிலான செயல்பாடுகளை பிரதிபலிக்கிறது, இது உள் பண உருவாக்கம் மற்றும் மறுநிதியளிப்பு முயற்சிகளை ஆதரிக்க வேண்டும்.,” என்றும் கூறினார் எஸ் & பி மேம்படுத்தல் வி ஆர் எல் ஆல் தொடங்கப்பட்ட வெற்றிகரமான ஒப்புதல் கோரிக்கைப் பயிற்சியைத் தொடர்ந்து வருகிறது. இதில், வி ஆர் எல்-ன் பத்திரதாரர்கள் நிறுவனம் 2028 இல் செலுத்த வேண்டிய 13.875% பத்திரங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரப்பட்டது. 99.53% வாக்குப்பதிவு பத்திரதாரர்களால் ஆதரிக்கப்பட்ட இந்த முன்மொழிவு (டிசம்பர் 16 காலக்கெடுவுக்குள்) அதன் கடன் முதிர்வு விவரத்தை திறம்பட நிர்வகிப்பதற்கும் அதன் மூலதனக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் வி ஆர் எல்-கு அதிக கடன் தலையணையை வழங்கும்.

வி ஆர் எல்-ன் நிலையான கவனம் அதன் இருப்புநிலைக் குறிப்பைப் பிரித்தெடுப்பதிலும் வலுப்படுத்துவதிலும் மற்ற முக்கிய மதிப்பீட்டு நிறுவனங்களால் மேம்படுத்தப்பட்டதா மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூடிஸ் வி ஆர் எல்-ன் பத்திரங்கள் மீதான பார்வையை கணிசமாக மேம்படுத்தியுள்ளது, அதன் மதிப்பீடுகளை "சி ஏ 2" இலிருந்து "பி3" க்கு 4 புள்ளிகள் வருடத்தில் நகர்த்தியது. முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதே அதன் தொடர்ச்சியான மேம்பாடுகளுக்கு அடிப்படைக் காரணம் எனக் குறிப்பிடுகிறது.

குழு-நிலை மறு மதிப்பீடு வி ஆர் எல்-ன் இந்திய துணை நிறுவனமான வேதாந்தா லிமிடெட் (வி ஈ டி எல்) க்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது, இது கடந்த சில காலாண்டுகளில் தொடர்ச்சியான மேம்படுத்தல்களைப் பெற்றது. இந்த மாத தொடக்கத்தில், கிரிசில் ஆனது வேதாந்தாவின் நீண்ட கால வங்கி வசதிகள் மற்றும் கடன் கருவிகள் மீதான அதன் மதிப்பீடுகளை 'ஏ ஏ-' இலிருந்து 'ஏ ஏ' ஆக மேம்படுத்தியது, அதே நேரத்தில் ஏ1+ இல் குறுகிய கால மதிப்பீட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது. இதேபோல், ஐ சி ஆர் ஏ ஆனது, நிறுவனத்தின் பலப்படுத்தப்பட்ட கடன் விவரத்தை மேற்கோள் காட்டி, வேதாந்தா லிமிடெட்டின் நீண்ட கால கடன் மதிப்பீட்டை செப்டம்பர் மாதத்தில் ஏ ஏ ஆக உயர்த்தியது.

மூன்று ஏஜென்சிகளும் வேதாந்தாவின் இருப்புநிலைக் குறிப்பைப் பயன்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு, குறைக்கப்பட்ட நிதிச் செலவுகள், எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் லாபம், குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் சரக்கு வணிகத்தில் சுழற்சியைத் தாங்கும் திறன் ஆகியவை இந்த நம்பிக்கை வாக்கெடுப்புக்குக் காரணங்களாக உள்ளன. இந்த ஆண்டு நவம்பரில் பங்குதாரர்களுக்கு எழுதிய கடிதத்தில் தலைவர் அனில் அகர்வால் பகிர்ந்தபடி, கடந்த இரண்டு ஆண்டுகளில் வி ஆர் எல்-ன் கடனை ~4.7 பில்லியன் டாலர் குறைத்துள்ளது.

இந்த மேம்படுத்தல்கள் வேதாந்தாவின் பத்திரச் சந்தைகளைத் தொடர்ந்து இடம்பிடிக்கும் திறனையும் பிரதிபலிக்கின்றன. கடந்த நான்கு மாதங்களில், வி ஆர் எல் பத்திர வெளியீடுகள் மூலம் 2 பில்லியன் அமெரிக்க டாலர்களை திரட்டியுள்ளது, ~ 300 பி பி எஸ் வட்டி செலவைக் குறைத்தது மற்றும் அதன் கடன் முதிர்வுகளை கணிசமாக வெளியே தள்ளியது, இது நிறுவனத்தின் மூலதன கட்டமைப்பை கணிசமாக வலுப்படுத்த உதவியது.

## ஓப்பன்சிக்னல் அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் 4ஜி அனுபவத்திற்கான முன்னணி வழங்குநராக விஐ நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

சென்னை 27 டிசம்பர் 2024: முன்னணி தொலைத்தொடர்பு ஆபரேட்டர் ஆன வோடபோன் ஐடியா (விஐ), 4ஜி பயனர்களின் 4ஜி அனுபவத்தை ஆய்வு செய்கிற ஓப்பன்சிக்னல் இன் 4ஜி நெட்வொர்க் எக்ஸ்பீரியன்ஸ் ரிப்போர்ட் நவம்பர் 2024* இல் சுட்டிக்காட்டியுள்ளபடி தமிழ்நாட்டில் 4ஜி நெட்வொர்க் அனுபவத்திற்கான தனது எண்ணற்ற வெற்றிகளுக்காகப் பாராட்டப்பட்டுள்ளதை இன்று பகிர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் விஐ இன் குறிப்பிடத்தக்க நெட்வொர்க் விரிவாக்கம், அதன் பயனர்களுக்கு மிகச் சிறந்த டிஜிட்டல் அனுபவங்கள் மற்றும் இணைப்பை வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை முக்கியப்படுத்திக்காட்டுகிறது.

ஓப்பன்சிக்னல் அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் அனைத்து வகைகள் முழுவதிலும் சிறந்த செயல்திறன் கொண்டதாக தரவரிசைப்படுத்துகின்ற வகையில், 4ஜி லைவ் வீடியோ, 4ஜி வீடியோ, 4ஜி கேமிங், 4ஜி வாய்ஸ் & 4ஜி பதிவிறக்க & பதிவேற்ற வேகங்கள் உள்ளிட்ட சிறந்த 4ஜி அனுபவத்தை வழங்குவதற்காக விஐ அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஓப்பன் சிக்னல் அறிக்கையின் இந்த கண்டுபிடிப்புகள், தமிழ்நாடு முழுவதும் நெட்வொர்க் செயல்திறனை மேம்படுத்துவதில் விஐ இன் தொடர்ச்சியான கவனத்தின் விளைவாக வந்துள்ளன. இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஏப்ரல் மாதத்தில், எஃப் ஃபி ஓ மூலம் விஐ, ரூபாய் 18,000 கோடியை வெற்றிகரமாக திரட்டியது மற்றும் நாடு முழுவதும் அதன் 4ஜினெட் வொர்க் ஐ விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் இந்த நிதியைப் பயன்படுத்த உறுதியளித்தது.

இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் 95% மக்களை உள்ளடக்குகின்ற இன்னும் சிறந்த நெட்வொர்க் கவரேஜ் மற்றும் வேகமான இணைய வேகத்தை உறுதிசெய்கின்ற வகையில் 3200 க்கும் மேற்பட்ட தளங்களில் நெட்வொர்க் திறனின் அதிக அடுக்குகளை சேர்ப்பதன் மூலம் விஐ தனது 4ஜி திறனை அதிகரித்தது. இந்த முன்னேற்றங்கள், விஐ ஜி ஐ ஜி ஏ நெட்வொர்க்கில் ஒரு தடையற்ற மற்றும் சிறந்த நெட்வொர்க் அனுபவத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் பேசிய கேரளா மற்றும் தமிழ்நாட்டின் கிளஸ்டர் பிசினஸ் தலைவர் ஆர்.எஸ். சாந்தாராம் கருத்து தெரிவிக்கையில், “தமிழகத்தில் எங்களின் சிறப்பான சாதனைக்காக அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் நெட்வொர்க்கை வலுப்படுத்துகின்றதிலும், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற இணைப்பை உறுதி செய்கின்றதிலும் எங்களின் தொடர்ச்சியான முதலீடுகளை இந்த சாதனை பிரதிபலிக்கிறது. இணைப்பில் சிறந்ததை வழங்குவதற்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்." என்று கூறினார். விஐ, தொடர்ந்து தனது வாடிக்கையாளர் வழங்கல்களை மேம்படுத்தவும், மிகச் சிறந்த டிஜிட்டல் அனுபவங்களை வழங்கவும் முயற்சிக்கிறது. தற்போதைய நெட்வொர்க் தரமுயர்த்துதல்கள், மேம்படுத்தப்பட்ட சேவைத் தரம் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகள் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு புதுமையான முயற்சிகள் மூலம், விஐ தனது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய அர்ப்பணித்துள்ளது.

அதன் சமீபத்திய வழங்கல்களில் சில :

விஐ சூப்பர்ஹீரோ ரீசார்ஜ்: விஐ வாடிக்கையாளர்கள் தினமும் 12ஏஎம் முதல் 12பிஎம் வரை வரம்பற்ற டேட்டாவை, வார இறுதி டேட்டா ரோல்ஓவர் மற்றும் டேட்டா டிலைட் போன்ற பிரத்தியேக பலன்களுடன் அரை நாளுக்கு அனுபவிக்க முடியும்.

ஒரு அரை நாளுக்கு தினமும் 12 மணி முதல் 12 மணி வரை வரம்பற்ற அதிவேக டேட்டா.

வார இறுதி டேட்டா ரோல்ஓவர்: பயன்படுத்தப்படாத வார நாள் தரவை முன்னோக்கி எடுத்துச் செல்லவும், வார இறுதியில் அதைப் பயன்படுத்தவும் பயனர்களை அனுமதிக்கிறது.

டேட்டா டிலைட்: 2ஜிபி வரை கூடுதல் டேட்டா/மாதம், அவர்களின் தினசரி டேட்டா ஒதுக்கீட்டிற்கு மேல் கூடுதல் செலவில்லாமல் வழங்குகிறது.